සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

නූතන ලෝක ඉතිහාසය II (I කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி I)
Modern World History II (Part I)

25 C T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**நவீன உலக வரலாறு - கி.பி 1500 - கி.பி 1989 வரை**

சுட்டெண் : ................................

**அறிவுறுத்தல்கள் :**

* இப்பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள **ஐந்து** தெரிவுகளில் **ஒன்று** மட்டுமே சரியானது. அச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள **அறிவுறுத்தல்களுக்கேற்ப உமது விடையைக் குறித்துக் காட்டுக.**
* பகுதி **I** இற்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* **இரண்டு** பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலங்களாகும்.** விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி **I** இற்கான விடைத்தாள்களை பகுதி **II** இற்கான விடைத்தாள்களுடன் **இணைத்துக் கையளிக்குக.**

## பகுதி I

- **1** தொடக்கம் **10** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் **பொருந்தாது** உள்ளது. அந்தப் **பொருந்தாத** பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**1.** (1) யூபிரடிஸ் (2) தைகிரிஸ் (3) நைல்
(4) சிந்து (5) பனாமா (......)

**2.** (1) கஸ்ரில் (2) அரகன் (3) கிரனடா
(4) நோமண்டி (5) நவாரே (......)

**3.** (1) ஜியோவன்னி பொக்கஷியோ (2) பிரான்சிஸ் பெட்ராக் (3) ஜேக்கப் வூகர்
(4) நிக்கொலோ மக்கியவல்லி (5) பிரான்சிஸ்கோ கீச்சியாடினி (......)

**4.** (1) புளோரிடா (2) கியூபா (3) ஜமெய்கா
(4) ஹிஸ்பானியோலா (5) பஹாமா (......)

**5.** (1) தோமஸ் ஜெபர்சன் (2) அன்ட்ரூ ஜக்சன் (3) மார்டின் லூதர் கிங்
(4) ஆபிரகாம் லிங்கன் (5) ஜோன் எவ் கென்னடி (......)

**6.** (1) மீராபோ (2) கலோன் (3) அபே சீயெஸ்
(4) ஜீன் போல் மராத் (5) மக்ஸிமிலியன் றொபெஸ்பியர் (......)

**7.** (1) மக்கோலே (2) டல்ஹவுஸி (3) கர்சன்
(4) மின்ரோ (5) லிட்டன் (......)

[பக். 2 ஐப் பார்க்க

**8.** (1) வின்ஸ்ரன் சேர்ச்சில் (2) ஜோசப் ஸ்ராலின் (3) லொயிட் ஜோர்ஜ்
(4) பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் (5) ஹரி ட்ருமன் (……)

**9.** (1) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)
(2) பொதுநலவாயம் (Common Wealth)
(3) உலக சுகாதார அமைப்பு (WHO)
(4) உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO)
(5) ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) (……)

**10.** (1) குஜராத் (2) உத்தரப் பிரதேசம் (3) மத்திய பிரதேசம்
(4) பீகார் (5) பூட்டான் (……)

● **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**12.** (1) மிங் - சீனா
(2) முகலாயர் - இந்தியா
(3) கொன்பௌங் - பர்மா
(4) ஒறேஞ்ச் - இத்தாலி
(5) ஸ்ருவர்ட் - இங்கிலாந்து (……)

**12.** (1) மக்காவோ - போர்த்துக்கல்
(2) ஆர்ஜென்ரீனா - ஸ்பானியா
(3) மின்தனோ - ஒல்லாந்து
(4) அல்ஜீரியா - பிரான்ஸ்
(5) லிபியா - இத்தாலி (……)

**13.** (1) லெவியதான் - தோமஸ் ஹொப்ஸ்
(2) சட்டங்களின் உயிர் - ஜீன் ஜக் ரூசோ
(3) உயிரினங்களின் தோற்றம் - சார்ள்ஸ் டார்வின்
(4) கோரா - இரவீந்திரநாத் தாகூர்
(5) உலக வரலாற்றின் கணப்பார்வை- ஜவகர்லால் நேரு (……)

**14.** (1) அடம் ஸ்மித் - தலையிடாக் கொள்கை
(2) ஜெரமி பெந்தம் - பயன்பாட்டு வாதம்
(3) கார்ள் மார்க்ஸ் - சோஷலிசம்
(4) V. I லெனின் - மேற்குலகுடன் அமைதியான சகவாழ்வு
(5) பாலகங்காதர திலகர் - சுவாராஜ் எண்ணக்கரு (……)

**15.** (1) கோல்ட் கோஸ்ற் - நைஜீரியா
(2) தங்கனிக்கா - தன்சானியா
(3) அபிசீனியா - எதியோப்பியா
(4) நியாசிலாந்து - மலாவி
(5) றொடிசியா - சிம்பாப்வே (……)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / திகதிகள் / கூற்றுகளின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/ திகதிகள் / கூற்றுகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. **Y**நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

[பக். 3 ஐப் பார்க்க

| | X | | Y |
|---|---|---|---|
| **16.** | (i) மகோன்னதப் புரட்சி | A | பிரதிநிதித்துவமில்லையேல் வரி இல்லை |
| | (ii) அமெரிக்கப் புரட்சி | B | அரசனுக்கு மேலாகப் பாராளுமன்றத்தின் வெற்றி |
| | (iii) பிரான்சியப் புரட்சி | C | கோமின்தாங் ஆட்சியைத் தோற்கடித்து கம்யூனிஸ்ட் வெற்றியடைதல் |
| | (iv) ரஷ்யப் புரட்சி | D | சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் |
| | (v) சீனப் புரட்சி | E | அமைதி, நிலம், உணவு |

(1) ABCDE (2) BADEC (3) BDAEC (4) ECDBA (5) EDACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **17.** | (i) ஆச்மட் சுகர்ணோ | A | சிங்கப்பூரின் பிரதமமந்திரி |
| | (ii) மனுவேல் ரொக்சாஸ் | B | சீனாவின் பிரதமமந்திரி |
| | (iii) சௌ-என்-லாய் | C | வடவியற்நாம் ஜனாதிபதி |
| | (iv) ஹோ-சி-மின் | D | பிலிப்பைன்சின் ஜனாதிபதி |
| | (v) லீ-குவான்-யூ | E | இந்தோனேசியாவின் ஜனாதிபதி |

(1) DABEC (2) DACBE (3) DEACB (4) ECDAB (5) EDBCA (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **18.** | (i) ரிக்வி லீ | A | பேரு |
| | (ii) டாக் ஹமர்ஷீல்ட் | B | நோர்வே |
| | (iii) ஊ தாண்ட் | C | ஆஸ்திரியா |
| | (iv) குட் வோல்ட்ஹெய்ம் | D | பர்மா |
| | (v) பெரேஸ் டி குவெலர் | E | சுவீடன் |

(1) ACEBD (2) BCAED (3) BEACD (4) BEDCA (5) DEACB (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **19.** | (i) ஜவகர்லால் நேரு | A | இந்தியாவின் முதல் ஜனாதிபதி |
| | (ii) முகமத் அலி ஜின்னா | B | இந்தியாவின் முதல் பெண் பிரதமமந்திரி |
| | (iii) இராஜேந்திர பிரசாத் | C | இந்தியாவின் முதல் பிரதமமந்திரி |
| | (iv) இந்திரா காந்தி | D | பங்களாதேசின் முதல் பிரதமமந்திரி |
| | (v) ஷேக் முஜிபுர் ரகுமான் | E | பாகிஸ்தானின் முதல் தேசாதிபதி |

(1) CEABD (2) DAEBC (3) DEBAC (4) ECADB (5) EDABC (……)

| | X | | Y |
|---|---|---|---|
| **20.** | (i) கானா | A | ஜூலியஸ் நியரேரே |
| | (ii) கொங்கோ | B | மில்டன் ஒபோடே |
| | (iii) தன்சானியா | C | ஜோமோ கென்யாட்டா |
| | (iv) உகண்டா | D | பற்றிஸ் லுமும்பா |
| | (v) கென்யா | E | குவாமி நிக்குருமா |

(1) ACBED (2) BDAEC (3) CADBE (4) ECABD (5) EDABC (……)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**21.** **இங்கிலாந்தின் ஏழாம் ஹென்றி**

(1) இங்கிலாந்தில் தேசிய அரசைத் தாபித்ததாகக் கருதப்பட்டார்.
(2) தியூடர் அரச வம்சத்தை உறுதியான அடிப்படையில் தாபித்தார்.
(3) இங்கிலாந்தின் சமய திருச்சபைக்கு தன்னைத் தலைவராகப் பிரகடனப்படுத்தினார்.
(4) வலுவான முடியாட்சியை கட்டியெழுப்பினார்.
(5) ஸ்ரார் சேம்பர் என்ற நீதிமன்ற சபையைத் தாபித்து கட்டுப்படுத்த முடியாத பிரபுக்களை அடக்கினார்.
(……)

**22. இலத்தின் அமெரிக்காவில் ஸ்பானியப் பேரரசு**

(1) கொலம்பஸ் கரிபியன் தீவுகளைக் கண்டுபிடித்தார்.
(2) அமெரிக்கோ வெஸ்புக்குயி பிரேசிலை வந்தடைந்தார்.
(3) கோர்டிஸ் மெக்சிக்கோவைக் கைப்பற்றினார்.
(4) பிஸாரோ பேருவைக் கைப்பற்றினார்.
(5) 1540 - 1541 இல் ஸ்பானியர்கள் மத்திய சிலியைக் கைப்பற்றினர். (……)

**23. பிரான்சியப் புரட்சி**

(1) நிதி நெருக்கடியும் எஸ்ரேட் ஜெனரல் சபையை அழைத்தலும்
(2) தேசிய சபையை (National Assembly) தாபித்தல்
(3) முதலாவது, இரண்டாவது கண்ட சம்மேளனங்கள்
(4) கிராண்டின், ஜகொபின் ஆட்சிக்காலம்
(5) டிரக்டரி (Directory) சபையின் ஆட்சி (……)

**24. பர்மா**

(1) பிரித்தானியர் பர்மாவைக் கைப்பற்றுதல் பல கட்டங்களில் இடம்பெற்றது.
(2) 1937 இல் பர்மா பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாகியது.
(3) பர்மா 1948 இல் சுதந்திரம் பெற்றது.
(4) அவுன்ங் சான் பர்மாவின் முதலாவது பிரதமர் ஆனார்.
(5) பர்மா, தற்போது மியன்மார் என அழைக்கப்படுகின்றது. (……)

**25. இந்தியாவின் தேசிய விடுதலைப் போராட்டம்**

(1) இந்திய தேசிய காங்கிரசினால் இந்திய விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
(2) சிவில் சட்டத்தை மீறும் இயக்கம்
(3) ஒத்துழையாமை இயக்கம்
(4) இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானால் இந்தியா கைப்பற்றப்படுதல்
(5) 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் (……)

● **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் …………………………… **4** எனவும்
**வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ………. **5** எனவும்
**அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு** விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி |

**26.** பின்வரும் போர்த்துக்கேயரின் கீழைத்தேய குடியேற்ற நாடுகளின் பேரரசு பற்றிய கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) அல்பொன்சோடி அல்புகர்க்கே கீழைத்தேய போர்த்துக்கேய பேரரசின் பிரதான சிற்பி எனக் கருதப்படுகின்றார்.
(B) போர்த்துக்கேயப் பேரரசின் கீழைத்தேய தலைமை அலுவலகம் கோவாவில் தாபிக்கப்பட்டிருந்தது.
(C) வஸ்கொடகாமா போர்த்துக்கேய குடியேற்றங்களின் முதலாவது தேசாதிபதி ஆவார்.
(D) ஸ்பானியர்கள் போர்த்துக்கேயரைக் கீழைத் தேசத்திலிருந்து வெளியேற்றினர். (……)

[பக். 5 ஐப் பார்க்க

**27. இந்தோனேசியா பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?**

(A) 17 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து இந்தோனேசியா அல்லது கிழக்கிந்தியத் தீவுகளை ஒல்லாந்தர் ஆட்சி செய்தனர்.

(B) இந்தோனேசியா இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது சீனாவினால் கைப்பற்றப்பட்டது.

(C) இந்தோனேசியா 1949 இல் சுதந்திரம் பெற்றது.

(D) 1967 இல் இந்தோனேசியா கம்யூனிச நாடாகியது. (……)

**28. அமெரிக்கப் புரட்சி பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?**

(A) பிரித்தானியரின் வரி மற்றும் வர்த்தகக் கொள்கைகளுக்கு எதிராக அமெரிக்கப் புரட்சி ஏற்பட்டது.

(B) பொஸ்ரன் தேநீர் விருந்து போன்ற குழப்பங்கள் ஆயுதப் போராட்டங்களாக 1775 இல் உருவெடுத்தன.

(C) 1776 ஜூலை 4 இல் சுதந்திரப் பிரகடனம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(D) பிரான்சியர்கள் பிரித்தானியருக்கு எதிராக அமெரிக்கர்களுக்கு உதவி வழங்கினர். (……)

**29. முதலாம் உலகப் போர் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?**

(A) ஐரோப்பிய வல்லரசு நாடுகள் இரு ஆதிக்க முகாம்களாகப் பிரிந்தமையே முதலாம் உலகப் போருக்கான முக்கிய காரணமாகும்.

(B) ஆஸ்திரிய இளவரசனான பிரான்சிஸ் பெர்டினன் சரஜிவோவில் கொலை செய்யப்பட்டதும் முதலாம் உலகப் போர் ஆரம்பமானது.

(C) ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி என்பன மத்திய வல்லரசுகள் எனப்பட்டன.

(D) ஹிரோஷிமா, நாகசாகி மீது குண்டு வீசப்பட்டதுடன் முதலாம் உலகப்போர் முடிவுக்கு வந்தது. (……)

**30. மலேசியா தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?**

(A) பிரித்தானியர் 1957 இல் மலாயாவுக்குப் பூரண சுதந்திரத்தை வழங்கினர்.

(B) மலேசிய கூட்டமைப்புடன் (Federation) புரூணை இணைந்து கொண்டது.

(C) மலேசியாவில் முதலாவது பிரதம மந்திரியாக துங்கு அப்துல் ரகுமான் நியமிக்கப்பட்டார்.

(D) துங்கு அபதுல் ரகுமானின் பின்னர் சுகார்டோ அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (……)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

**31. இந்தியாவில் 'பிரம்ம சமாஜம்' என்ற சமய சீர்திருத்த இயக்கத்தைத் தாபித்தவர்**

(1) கேசப் சந்திர சென் (2) சுவாமி விவேகானந்தர் (3) இராஜாராம் மோகன் ராய்
(4) ரவீந்திரநாத் தாகூர் (5) தயானந்த சரஸ்வதி (……)

**32. தொடர்புடைமைக் (Relativity) கோட்பாட்டை முன்வைத்தவர் யார்?**

(1) ஐசக் நியூட்டன் (2) தோமஸ் மால்தஸ் (3) பிரெட்ரிக் நிட்ஷே
(4) மாரி கியூரி (5) அல்பேர்ட் ஐன்ஸ்டின் (……)

**33. 1911 - 1912 'சீனக் குடியரசின்' தந்தை எனக் குறிப்பிடப்பட்டவர் யார்?**

(1) கான்-யூ-வெய் (2) சுன்-யற்-சென் (3) யுவான்-ஷிஹ்-காய்
(4) சென்-து-ஹ்சுயு (5) சியங்-கை-ஷேக் (……)

**34. போல்ஷ்விக் புரட்சியின் தலைவர் யார்?**

(1) ஜோர்ஜ் பிளேகனொவ் (2) அலெக்சாந்தர் கெரன்ஸ்கி (3) லியோன் ட்ரொஸ்கி
(4) V. I லெனின் (5) ஜோசப் ஸ்ராலின் (……)

**35. சுயெஸ் கால்வாயை தேசிய மயமாக்கிய எகிப்திய ஜனாதிபதி யார்?**

(1) முஹம்மத் நஜீப் (2) காமல் அப்துல் நசார் (3) அன்வர் சதாத்
(4) மெனஹெம் பேகின் (5) ஹொஸ்னி முபாரக் (……)

[பக். 6 ஐப் பார்க்க

● **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது | பிழையானது |
| **2** | சரியானது | சரியானது |
| **3** | பிழையானது | பிழையானது |
| **4** | பிழையானது | சரியானது |
| **5** | சரியானது | சரியானதாக இருப்பதுடன் **முதலாவது** கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | மானிட வாதம் மனிதனின் மேலாண்மையை வலியுறுத்துகின்றது. | தெய்வீக உரிமைக் கோட்பாட்டை பின்பற்றிய ஐரோப்பிய மன்னர்கள் பலர் தாங்கள் கடவுளால் ஆட்சி செய்யத் தெரிவு செய்யப்பட்டதாக உரிமை கோரினார்கள். | (.........) |
| **37.** | 1789 பிரான்சியப் புரட்சி ஏற்பட்டவுடனேயே லூயி நெப்போலியன் பிரான்சின் ஆட்சியாளன் ஆனான். | வரலாற்றாசிரியர்கள் சிலர் 1857 இன் மக்கள் எழுச்சியை முதலாவது இந்திய சுதந்திரப் போர் எனக் கருதுகின்றனர். | (.........) |
| **38.** | முதலாவது அபின் யுத்தத்தின் இறுதியில் கையொப்பமிடப்பட்ட நான்கிங் ஒப்பந்தத்தினால் ஹொங்கொங் தீவு பிரித்தானியருக்கு ஒப்படைக்கப்பட்டது. | பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் சூலா லொங் கோர்ண் மன்னன் வியட்னாமில் நவீனமயப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தினான். | (.........) |
| **39.** | 1898 இல் ஸ்பானியர்களிடமிருந்து பிலிப்பைன்சைக் கைப்பற்றிய பின்னர் அமெரிக்கர்களால் ஜெனரல் டக்ளஸ் மக் ஆர்தர் அதன் முதலாவது தேசாதிபதியாக நியமிக்கப்பட்டார். | ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் முதலாவது சான்சிலர் சார்ள்ஸ் டி கோல் ஆவார். | (.........) |
| **40.** | மனித வரலாற்றில் மிகுந்த அழிவை ஏற்படுத்தியதாகக் கருதப்படும் இரண்டாம் உலகப் போர் உலகின் அரசியல், இராஜதந்திரம், சர்வதேசத் தொடர்புகளில் அடிப்படை மாற்றங்களை அடையாளப்படுத்துகின்றது. | இரண்டாம் உலகப் போரில் இறந்தவர்களின் எண்ணிக்கை 50 மில்லியனுக்கு அதிகமாக இருப்பதுடன் போரானது ஐக்கிய அமெரிக்க அரசுகள் சோவியத் யூனியன் என்பன உலக வல்லாதிக்க நாடுகளாக எழுச்சியடையவும் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் சுதந்திர அரசுகள் பலவற்றை உருவாக்கி ஐரோப்பாவின் குடியேற்ற நாடுகளின் பேரரசு வீழ்ச்சியடைவதை விரைவுபடுத்தவும் வழி ஏற்படுத்தியது. | (.........) |

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021(2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021(2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021(2022)

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 1

නූතන ලෝක ඉතිහාසය II
நவீன உலக வரலாறு II
Modern World History II

25C T

විභාග අංකය / சுட்டெண் / Index No. ..............................



**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) கிரேக்க சமயமும் தத்துவமும்

(ii) ஏழாம் ஹென்றி **அல்லது** எட்டாம் ஹென்றியின் கீழ் இங்கிலாந்து

(iii) இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சியின் பின்னணி

(iv) நெப்போலியன் போனபாட்டின் உள்நாட்டுக் கொள்கை

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** விக்டர் இமானுவேல் மன்னன், கவூர், கரிபோல்டி ஆகியோரின் வகிபாகத்தை மதிப்பீடு செய்து, 1848 இலிருந்து 1870 வரையுள்ள காலப்பகுதியில் இத்தாலியை ஐக்கியப்படுத்திய முக்கிய சந்தர்ப்பங்களைப் பரிசீலிக்குக.

(16 புள்ளிகள்)

**7.** "1917 இல் போல்ஷ்விக் புரட்சி ரஷ்யாவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்தியது."

(i) 1917 வரை ரஷ்யாவை ஆட்சி செய்த இறுதி சார் மன்னனின் பெயரைத் தருக. (01 புள்ளிகள்)

(ii) போல்ஷ்விக் புரட்சியின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) போல்ஷ்விக்குகள் ரஷ்யாவின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஏதுவான காரணிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) 1917 போல்ஷ்விக் புரட்சி ரஷ்யாவில் நீண்டகால மாற்றங்களை ஏற்படுத்திய விதத்தைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

**8.** இடைப்பட்ட போர்க் காலத்தில் (Inter war) ஜெர்மனியில் நாஸிசம் எழுச்சி பெறுவதற்கு ஏதுவான முக்கிய காரணிகளைப் பகுப்பாய்வு செய்க. (16 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) வியன்னா மகாநாடு

(ii) பிஸ்மார்க்

(iii) பெனிடோ முசோலினி

(iv) 1980 வரை சமாதானத்தைப் பாதுகாக்கும் நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபையின் வகிபாகம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

❊ ❊ ❊

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

යුරෝපා ඉතිහාසය II (II කොටස)
ஐரோப்பிய வரலாறு II (பகுதி II)
History of Europe II (Part II)

25 B T II

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க உரோம காலம் முதல் கி.பி. **1989** வரை

**அறிவுறுத்தல்கள் :**

※ **முதலாம்** வினா கட்டாயமானது.

※ **முதலாம்** வினாவுக்கும் **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| (i) மத்திய தரைக் கடல் | (ii) கிறீட் | (iii) உரோம் |
| (iv) டான்யூப் நதி | (v) கஸ்பியன் கடல் | (vi) போ நதி |
| (vii) பொஸ்பரஸ் நீரிணை | (viii) போலந்து | (ix) ஜெனீவா |
| (x) நோர்வே | (xi) லிவர்பூல் | (xii) டான்சிக் |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** நகர அரசாக இருந்து பரந்த பேரரசாக உரோமின் ஆதிக்கப் பரம்பலின் பிரதான கட்டங்களை எடுத்துக்காட்டுக. (16 புள்ளிகள்)

**3.** "மறுமலர்ச்சி, அடிப்படையில் கலாசார இயக்கமாகும்."

(i) மறுமலர்ச்சி ஆரம்பித்த நாட்டின் பெயரைத் தருக. (01 புள்ளிகள்)

(ii) மறுமலர்ச்சிக்கு ஆதரவு வழங்கிய **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) மறுமலர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமான விடயங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) கலை, மொழி, இலக்கியம் ஆகிய துறைகளில் கவனம் செலுத்தி கலாசார இயக்கமாக மறுமலர்ச்சியின் முக்கியத்துவத்தை ஆராய்க. (08 புள்ளிகள்)

**4.** பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தி அமெரிக்கப் புரட்சி பற்றி விமர்சனரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

(i) புரட்சியின் பின்னணி (08 புள்ளிகள்)

(ii) அதன் விளைவுகள் (08 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

නූතන ලෝක ඉතිහාසය II (II කොටස)
நவீன உலக வரலாறு II (பகுதி II)
Modern World History II (Part II)

25 C | T | II

**நவீன உலக வரலாறு - கி.பி 1500 கி.பி 1989 வரை**

**அறிவுறுத்தல்கள் :**

※ **முதலாம்** வினா கட்டாயமானது.

※ **முதலாம்** வினாவுக்கும், **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **உலகப் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

**1.** உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

(i) குவாங்கோ நதி
(ii) தாய்வான்
(iii) சுமாத்திரா
(iv) ஆப்கானிஸ்தான்
(v) நன்னம்பிக்கை முனை
(vi) செங்கடல்
(vii) ஸ்பெயின்
(viii) கீல் கால்வாய்
(ix) நோர்வே
(x) கியூபா
(xi) வாஷிங்டன்
(xii) அமேசன் நதி

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

## பகுதி B

**2.** "கொன்ஸ்தாந்திநோபிள் நகரம் ஒட்டோமன் துருக்கியர்களிடம் வீழ்ச்சியடைந்தமை ஐரோப்பாவில் மட்டுமன்றி ஆசியாவின் வரலாற்றிலும் தாக்கம் செலுத்திய நிகழ்வாகக் கருதப்படுகின்றது." பின்வருவனவற்றின் வளர்ச்சியைத் துணையாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.

(i) மறுமலர்ச்சி (08 புள்ளிகள்)

(ii) நாடுகாண் பயணங்கள் (08 புள்ளிகள்)

**3.** "19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் பொருளாதாரமும் சமூகமும் பிரதானமாக கைத்தொழில் புரட்சியின் செல்வாக்கின் கீழ் உருவாக்கப்பட்டன."

(i) கைத்தொழில் புரட்சி ஆரம்பமான நாட்டின் பெயரைத் தருக. (01 புள்ளி)

(ii) கைத்தொழில் புரட்சி அந்த நாட்டில் முதன்முதலில் ஏற்படுவதற்கான **இரண்டு** காரணங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சிக் காலத்தின் முக்கிய கண்டுபிடிப்புக்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளில் விசேட கவனம் செலுத்தி அதன் செல்வாக்கினால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பிய பொருளாதாரமும் சமூகமும் உருவாக்கப்பட்ட முறையினைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

**4.** இத்தாலியின் ஐக்கிய இயக்கத்தைப் பின்வரும் கருப்பொருள்களின் கீழ் பரிசீலிக்குக.
(i) ஐக்கியத்துக்கு எதிராக நிலவிய தடைகள்
(ii) தலைமைத்துவம்
(iii) ஐக்கிய இயக்கத்தின் முக்கிய கட்டங்கள் (16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
(i) ஒல்லாந்தரின் குடியேற்றப் பேரரசு
(ii) மகோன்னதப் புரட்சி
(iii) பழைய அதிகாரத்துவ ஆட்சிமுறை (Ancien Regime)
(iv) புதிய பேரரசு வாதம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** இந்தியாவின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா காந்தியின் வகிபாகத்தைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

**7.** "சர்வதேச சங்கம் தோல்வியடைந்தமையே இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கான வழியை ஏற்படுத்தியது."
(i) சர்வதேச சங்கத்தைத் தாபிப்பதற்கு வழியேற்படுத்திய உடன்படிக்கையின் பெயர் யாது? (01 புள்ளி)
(ii) சர்வதேச சங்கத்தின் **இரண்டு** நோக்கங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(iii) சர்வதேச சங்கம் தோல்வியடைவதற்குக் காரணமான விடயங்கள் பற்றிச் சுருக்கக் குறிப்பு எழுதுக. (04 புள்ளிகள்)
(iv) சர்வதேச சங்கத்தின் தோல்வியானது இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு எந்தளவிற்குக் காரணமாய் அமைந்தது என்பதைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

**8.** (i) 1949 இல் சீனாவில் கம்யூனிசம் வெற்றியடைந்தமைக்கான காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)
(ii) மாஓசேதுங் பின்பற்றிய அரசியல், சமூக, பொருளாதார கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்து, அவை எந்தளவிற்கு வெற்றியடைந்தன என்பதனை பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
(i) மேஜி சீர்திருத்தம்
(ii) ரஷ்யப் புரட்சிக்கான பின்னணி
(iii) பனிப்போர்
(iv) அணிசேரா இயக்கம்

(08 × 2 = 16 புள்ளிகள்)

* * *